# அருளாளன் அந்தாதி

கண்டேன் திருக்கண்டேன் கண்டேன் பொன்னிறக்கரியனை
கண்டேன் அபயவரதனை கண்டேயென் கவலை ஒழித்தேன்
கண்டேன் என் காவலனை  கண்டேயுகந்தேன் கரிகிரிமேல்
கண்ட கண்கள் மற்றொன்றை காணாவே! 17

காணாதே என்னெஞ்சம் கனத்தென் வளைகழல - கண்ணன்
நாணாதே என்னையும் நோக்கி என்னல்குலும் நோக்குகின்றான்
நாணாதாய் என்தோழி தூதாய்போய் சொல்லாயோ
நாணம்விடுத்தேன் நாரணனுக்காய் நானென்றே! 18

நாணம்விட்டேன் நாரணா வந்தென்னை நீயணைப்பாய்
காமரும்பூங்கசசி நகருறையும் நாயகனே
பாமரும் போற்றுமுன்னை  பல்வகையால் பாடுகின்றேன்
நாணம்விடுத்த இந்நாயகியை கூடாயோ !! 19

கூடிக்களிப்பதற்காய் தேடி நிதம் ஓடிவந்தேன்
கூடாமல் நீயும் ஓடி ஒளிவதென்ன கரியானே
பாட்டாக பாடி நிதம் பாடியே  அலருகின்றேன்
கூட்டாக நீயும் எனை அணைத்திடுவாய் கரிவரதா !!

அணைத்தேயென் அகந்திறந்தான் கச்சிகிரியருளாளன்
தன்னுருவைத்தான் காண தன்முன்பே தானிருந்தான்
என்னுருவம் நான்காண என்னுள்ளும் தானிருந்தான்
அணைத்தேயவனை என்னை நான் உணர்ந்தேனே! 20

என்னை எனக்குணர்த்தி என்னகம் திறந்த கண்ணன்
தன்னைத்தான் மறைத்து எங்குசென்றான் அறிவாயோ தோழி
எந்நாளுமுனைப் பிரியேன் என்றானேயவன்
செந்நா உலருமுன்னே பிரிந்தானே என் செய்கேன் 21

என்செய்கேன் என்றேநான் நாவுலர தவித்திருக்க
என்நாதன் எங்குற்றான் அறிவாயோ பைங்கிளியே
வானின்று வந்தவர்கள் தானழைத்துப்போயினரோ
ஆவினத்தின் காவலனே யென்பாவினுக்கு இரங்காயோ !! 22

இரங்காய்யென் பாவினுக்கு என்றழைத்த குரலுக்கு
இரங்கினான் கரிக்கிரங்கிய கரிகிரிக் காவலன்
தயங்காதே தன் செய்ய தாமரைத் தாள்காட்டி
மயங்காதே - மாசுச : என்றணைத்தான் கண்டாயோ தோழிநீ !! 23



அணைத்தவனைக் கண்டாயோ தோழி கணந்தன்னில் மயக்கினான்
பிணைத்தன னவனை ஊனுடல் உயிரினுள்ளே
கடல்நிற கடவுள் கார்மேனி செங்கண்ணான்
உட லுயிர்விடுத்தென் உள்ளங்கவர்ந்தனனே!! 24

உள்ளங்கவர்ந்தவனை உள்ளத்தில் நினைத்திருந்தேன்
கள்ளந்தவிர்த்தே களித்து  கலந்திருந்தேன்
வெள்ளத்தரவு துயில்வோனை பரியனைக் கரியனை
துள்ளும் மனதால் தூய்த்து !! 25

துள்ளிய மனந்தனில் கடைந்த வெண்ணையாய் - தீயின்
உள்ளிருந்து தோன்றிய திகழ்திருச் சக்கரத்தானை - பாயும்
புள்ளதன்மேல் பரவிய பூமகள் கேள்வனை - சீரும்
தெள்ளியமாகிய தேவனை கச்சிசென்றடை நெஞ்சே ! 26

சென்றடைந்தேத்தினர் சடையனும் பிரமனும்
செஞ்சடைத் தீயிற் தோன்றிய தேவனை
மன்பதை மாண்புற வரந்தரும் வரதனை
நெஞ்சிடை நிறைத்தே நாடித் தொழுவனே !! 27

நாடித் தொழுதனன் நல்லாயிரம் நாமஞ்சொல்லி - இசை
பாடிப் பணிந்தனன் நாவுக்கினிய நாலாயிரத்தால் - பின்
தேடித் திளைத்தனனென் தேவனின் அழகிலே - தினம்
கூடிக் களித்தனன் கரியனின் கனிவிலே !! 28

கனிந்தேன் கரிகிரியான் கழலிடிக் கடியனாய்
தெளிந்தேன் தெள்ளியதேவு வேறிலையென்றே
உரைத்தேன் உணர்ந்த உண்மை உலகறிய
மறை தேன் அரியையழித்த அரியே !! 29

அரியினை அறிந்தார்க்கு அரிபயமில்லை இந்நாநிலத்தே வெள்ளைப்
பரியினைப் பணிந்தார்க்கு ஞானக் குறைவில்லை - என்றும்
பரிதி மதி நயனமுடை கச்சிநகர் காவலனாம் - எங்கள்
கரிகிரியானடி யடைந்தார்க்கில்லை பிறப்பே !! 30



அடைக்கலமாய் அடைந்தவற்கு அருள்புரியும் அருளாளன்
படைக்கடவுள் பிரமனவன் வேதியுதித்த வேதனவன்
படைக்கலனாம் பொறிகொண்டே பாதமலர் பணிந்து நின்றேன்
தடையெல்லாம் தகர்த்தெந்தன் பிறப்பொழித் தருள்வாயே !! 31

பிறப்பொழிப்பாய் கரிவரதாவுன் மலர்ப்பதங்கள் சரணடைந்தேன்
சிறப்பில்லா மதியுடையேன் மானுடனாய் வடிவெடுத்தேன்
பருப்பதத்துக் கயல்பொரித்த பாண்டியனின் குலபதியே - உன்
திருப்பதத் தடிக்கடியா யாக்கியெனை ஆட்படுத்தாய் !! 32

அடிக்கடியாய் ஆட்படுத்தும் ஆலிலைமேல் அழகுருவும்
படிப்படியாய் பரிணாமக் காட்சிதந்த பத்துருவும்
சிரிக்கும்விழி பேழ்வாயன் எம்சிங்கன் திருவுருவும்
கரிக்குகந்த கரிகிரியான் உருவல்லால் மற்றில்லை ! 33

மற்றோர்தேவனன்றி நின்திருவடிகள் சரணடைந்தேன்
இற்றைக்கும் எற்றைக்கும் உமதடிகள் விலகேன்யான்
சிற்றஞ்சிறியேன் சீர்மையிலா பிறப்பெடுத்தேன்
சற்றேயுன் விழிதிறந்து இக்கடையேனை கண்டருளே !! 34

கண்திறந்தான் கமலக்கண்ணன் கற்றினம் மேய்த்தயெந்தை
கண்திறந்தான் கார்மேகக் கரிகிரியான் - தன்மருகன்
சண்முகத்தான் தந்தையவன் துயரறுத்தான் - சீர்மல்கும்
எண்எழுத்தான் என் பாவினுக் கிரங்கி !! 35

தொடரும். . .